## மெட்ரோ ரயில் நிலையங்களில்

# 9 நாள் மார்கழி மாத இசை விழா

■ சென்னை

மெட்ரோ ரயில்களில் பயணிகளை ஈர்க்கும் வகையில் பல்வேறு நிகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் ஒருபகுதியாக மார்கழி மாதத்தை சிறப்பிக்கும் வகையில் 'மெட்ரோ மியூசிக் எடிட்-2019' என்ற தலைப்பில் மெட்ரோ ரயில் நிலையங்களில் 9 நாட்களுக்கு மாலை நேர இசை நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

அன்வின்ட் இசை மையம் சார்பில் கோயம்பேடு மெட்ரோ ரயில் நிலையத்தில் நேற்று கூட்டிசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதேபோல், சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் தனிநபர் டிரம்ஸ் இசை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இதற்கிடையே, திருமங்கலம், ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையங்களில் எம்ஓபி வைஷ்ணவ பெண்கள் கல்லூரி சார்பில் இன்று இசை நிகழ்ச்சி நடக்கிறது. அசோக்நகர் நிலையத்தில் நாளை பரதநாட்டியமும், 21-ம் தேதி சென்னை சென்ட்ரலில் தமிழ் கூட்டிசை நிகழ்ச்சியும் நடக்கவுள்ளன.

21-ம் தேதி கிண்டி, 22-ம் தேதி பரங்கிமலை நிலையங்களில் பறையிசை, 23-ல் சென்ட்ரலில் பரதநாட்டியம் நடக்கிறது. 25-ம் தேதி அண்ணாநகர், ஜன.1-ல் வடபழனி நிலையங்களில் பறையிசை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.